# பெரியாழ்வார் திருமொழி 3-7

## ஐயபுழுதி

(திருமாலினிடத்து ஈடுபட்ட தலைமகள் இளமை கண்டு நற்றாய் இரங்கும் பாசுரம்)

286 * ஐய புழுதி உடம்பளைந்து * இவள் பேச்சு மலந்தலையாய் *
செய்ய நூலின் சிற்றாடை * செப்பனுடுக்கவும் வல்லளல்லள் **
கையினில் சிறு தூதையோடு * இவள் முற்றில் பிரிந்துமிலள் *
பையரவணைப் பள்ளியானோடு * கைவைத்து இவள் வருமே (1)

287 வாயில் பல்லும் எழுந்தில * மயிரும் முடி கூடிற்றில *
சாய்விலாத குறுந்தலைச் * சில பிள்ளைகளோடிணங்கி **
தீயிணக்கிணங்காடி வந்து * இவள் தன்னன்ன செம்மை
சொல்லி *
மாயன் மாமணி வண்ணன் மேல் * இவள் மாலுறுகின்றாளே (2)

288 பொங்கு வெண்மணல் கொண்டு * சிற்றிலும்
முற்றத்திழைக்கலுறில் *
சங்கு சக்கரம் தண்டு வாள் * வில்லுமல்லது இழைக்கலுறாள் **
கொங்கை இன்னம் குவிந்தெழுந்தில * கோவிந்தனோடு
இவளை *
சங்கையாகி என்னுள்ளம் * நாள்தொறும் தட்டுளுப்பாகின்றதே (3)

289 ஏழைபேதை ஓர் பாலகன் வந்து * என் பெண்மகளை எள்கி *
தோழிமார் பலர் கொண்டுபோய்ச் * செய்த சூழ்ச்சியை
யார்க்குரைக்கேன் **
ஆழியான் என்னுமாழமோழையில் * பாய்ச்சி அகப்படுத்தி *
மூழையுப்பறியாததென்னும் * மூதுரையும் இலளே (4)

290 நாடும் ஊரும் அறியவே போய் * நல்ல துழாயலங்கள்
சூடி * நாரணன் போமிடமெல்லாம் * சோதித்துழி
தருகின்றாள் **
கேடு வேண்டுகின்றார் பலருளர் * கேசவனோடு இவளை *
பாடுகாவலிடுமின் என்றென்று * பார் தடுமாறினதே (5)

291 பட்டம் கட்டிப் பொற்றோடு பெய்து * இவள் பாடகமும் சிலம்பும் *
இட்டமாக வளர்த்தெடுத்தேனுக்கு * என்னோடு இருக்கலுறாள் **
பொட்டப் போய்ப் புறப்பட்டு நின்று * இவள் பூவைப் பூவண்ணா
என்னும் *

வட்டவார் குழல் மங்கைமீர் * இவள் மாலுறுகின்றாளே (6)

292 பேசவும் தரியாத பெண்மையின் * பேதையேன் பேதை இவள் *
கூசமின்றி நின்றார்கள் தம்மெதிர் * கோல் கழிந்தான்
மூழையாய் **
கேசவா என்றும் கேடிலீ என்றும் * கிஞ்சுக வாய் மொழியாள் *
வாசவார் குழல் மங்கைமீர் * இவள் மாலுறுகின்றாளே (7)

293 காறை பூணும் கண்ணாடி காணும் * தன் கையில் வளை
குலுக்கும் *
கூறையுடுக்கும் அயர்க்கும் * தன் கொவ்வைச் செவ்வாய்
திருத்தும் **
தேறித் தேறி நின்று ஆயிரம் பேர்த் * தேவன் திறம் பிதற்றும் *
மாறில் மாமணி வண்ணன் மேல் * இவள் மாலுறுகின்றாளே (8)

294 கைத்தலத்துள்ள மாடழியக் * கண்ணாலங்கள் செய்து * இவளை
வைத்து வைத்துக் கொண்டு என்ன வாணிபம் * நம்மை
வடுப்படுத்தும் **
செய்த்தலை எழுநாற்றுப் போல் * அவன் செய்வன செய்து
கொள்ள *
மைத்தட முகில் வண்ணன் பக்கல் * வளர விடுமின்களே (9)

295 பெருப் பெருத்த கண்ணாலங்கள் செய்து * பேணி நம்
இல்லத்துள்ளே *
இருத்துவான் எண்ணி நாம் இருக்க * இவளும்
ஒன்றெண்ணுகின்றாள் **
மருத்துவப்பதம் நீங்கினாள் என்னும் * வார்த்தை படுவதன் முன் *
ஒருப்படுத்திடுமின் இவளை * உலகளந்தான் இடைக்கே (10)

296 * ஞாலமுற்றும் உண்டு ஆலிலைத் துயில் * நாராயணனுக்கு *
இவள்
மாலதாகி மகிழ்ந்தனள் என்று * தாயுரை செய்ததனை **
கோலமார் பொழில்சூழ் புதுவையர் கோன் * விட்டுசித்தன்
சொன்ன *
மாலை பத்தும் வல்லவர்கட்கு * இல்லை வரு துயரே (11)